உ
சிவமயம்



மாதகல் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திரு. கார்த்திகேசு ஜெகநாதன்

அவர்களின் சிவப்பேறு குறித்த

# நினைவு மலர்

**08.09.2013**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாதகல் கிழக்கைப் பிறப்பிடமாகவும்,
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திரு. கார்த்திகேசு ஜெகநாதன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**08.09.2013**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

## மறந்திட முடியுமா?

எமதருகே இருந்த உம்மை
கணப்பொழுதில் இழந்தோமோ?
உணர்விழந்தே வாடுகின்றோம்
உத்தமனே ஏன் பிரிந்தாய்
நினைக்கையிலே நெஞ்சம்
நிறையிழந்தே போனதையா
மனத்துயரம் எமக்களித்து
மன்னவனே ஏன் மறைந்தாய்
மனைவி மக்கள் தம்முடனே
மகிழ்ச்சியுடன் வாழ்ந்த வுன்னை
அணைத் தெடுத்தான் காலனவன்
ஐயகோ... ஏது செய்வோம்
நிலவெனவே நீ மிளிர்ந்தாய்
நிறை வாழ்வை எமக்களித்தாய்
உறைந்ததையா குருதியிங்கே
ஒளி நிலவே ஏன் மறைந்தாய்
விரைந்ததுவோ விதியின்று
நிறைந்ததுவே துயரிங்கே
மறைந்ததுவே நின் வதனம்
மறந்திடவே முடியுமா
உமையென்றும்





**மனைவி,**
**பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

சங்கரன் மகனே சஞ்சலம் தீர்ப்பாய் சக்தி குமாரா கணநாதா
ஐங்கரன் உன் அடியினை தொழுதேன் அடைக்கலம் நீயே கணநாதா
சங்கரித்திடுவாய் சங்கட மெல்லாம் சம்பு குமாரா கணநாதா
சங்கரி மைந்தா சந்ததம் பணிவேன் சரணம் சரணம் கணநாதா.

## தேவாரம்

திங்கள் தங்கிய சடையுடைய யானைத்
தேவ தேவனைச் செழுங்கடல் வளரும்
சங்கவெண் குழைக் காதுடையானைச்
சாமவேதம் பெரிது காப்பானை
மங்கை தங்கை மயைமகள் கண்டு
மருவியேத்தி வழிபடப் பெற்ற
கங்க யானைக் கம்பனெம்மானைக்
காணக் கண்ணடியேன் பெற்றவாறே.

## திருவாசகம்

சோதியாய்த் தோன்றும் உருவமே அருவமாம்
ஒருவனே சொல்லுதற்கரிய
ஆதியே நடுவே அத்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்தமா கடலே
நீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருஞ் துறையுறைச் சிவனே
யாது நீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்து நின் இணையடி தந்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருவிசைப்பா

பன்னெடுங்காலம் பணிசெய்து பழையோர்
தாம்பல ரேம்பலித் திருக்க
வென்னெடுங் கோயிநெஞ்சு வீற்றிருந்த
வெளிமையை யென்று நான் மறக்கேன்
மின்னெடும் புருவத்திள மயிலனையார்
விலங்கல்செய் நாடகசாலை
இன்நடம் பயிலுமிஞ்சி சூழ் தஞ்சை
யிரசராசேச் சரத்திவர்க்கே

### திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்ட ருள்ளீர்
சில்லாண் டிற் சிதையுஞ்சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு விடங்கன்
விடைப் பாகன்
பல்லாண்டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறு துமே.

### திருப்புராணம்

ஞானத்தின் திருவுருவை நான்
மறையின் தனித் துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்
வளர்மதிக் கொழுந்தைத்
தேனக்க மலர்க் கொன்றைச்
செஞ்சடையார் சீர் கொடுக்கும்
கானத்தின் ஏழுபிறப்பைக்
கண்களிற் கண்டார்கள்.

### திருப்புகழ்

காசினியிற் பிறவாதே காலனிடத் தனுகாதே
சீல அகத்திய ஞானதேன் அமுதைத் தருவாயே
மாலயனுக் கரியோனே மாதவரைப் பிரியானே
சோலை மலைக்குரியொனே சுவாமி மலைப் பெருமாளே.

### வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரமபதப் பேறடைந்த
## அமரர் கார்த்திகேசு ஜெகநாதன்
## அவர்களின்
## (வாழ்க்கைச் சரிதம்)

சகல அண்ட சராசரங்களிலும் இந்து சமுத்திரத்தின் நித்திலம் எனப் போற்றப்படும் வீணைக் கொடியுடை வேந்தனாம் இராவணன் வீறுடன் ஆண்ட நம் இலங்கை மண்ணில் வடபால் விவசாய வளமும், கடல் வளமும், கல்வி வளமும், சைவமும், தமிழும் தழைத்தோங்கிய மாதகல் நிலப்பரப்பில் யாழ்ப்பாண வைபவமாலையை ஆக்கிய நற்புலவர் மயில்வாகனத்தார் வழியில் வந்த கார்த்திகேசு செல்லம்மா (அமரர்) தம்பதிகளின் இல்லற வாழ்வின் பயனாக செல்லத்துரை, விநாயகமூர்த்தி, இராசரத்தினம் (அமரர்), ஈஸ்வரி, துரைராஜா, ஜெகநாதன், சின்னராசா (அமரர்) ஆகிய பிள்ளைச் செல்வங்களைப் பெற்றெடுத்தனர்.

இத்தம்பதியினரின் ஆறாவது புதல்வனாகிய அமரர் ஜெகநாதன் 1957 ஆனி பதினாறாம் திகதி அன்று பிறந்தார். இவர் தனது கல்வி பராயத்தை அடைந்ததும் ஆரம்பக்கல்வியை யா/ மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை யா/ புனித சஞ்சூசையப்பர் மகா வித்தியாலயத்திலும் பயின்றார்.

இவர் தம் தந்தையாருடனும், சகோதரர்களுடனும் அன்பாகவும், பண்பாகவும் இணைந்து தம் ஜீவனோபாய தொழிலாகிய விவசாயத்தில் சிறந்து விளங்கினார்

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையால்"

எனும் வாக்கிற்கிணங்க சிறந்த விவசாயியாக விளங்கினார்.

இவர் தனது திருமணப் பருவம் அடைந்ததும் பெற்றோர் சிறுவிளான் பதியைச் சேர்ந்த இராசா மகேஸ்வரி தம்பதிகளின் புதல்வியான புஷ்பமலரை இல்லறத் துணைவியாக கரம் பிடித்து வைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் இருவரும்

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது,"

எனும் வள்ளுவர் வாக்கிற்கமைய இல்லற வாழ்க்கையை இனிதே நடத்தி வந்தார்கள். இல்லறம் எனும் நல்லறத்தின் அணிகலன்களாக தர்ஷினி, ரதீஷ், ஜயந்தேஷ் எனும் மூன்று முத்துக்களைப் பெற்றெடுத்தனர்.

குழந்தைகளை சீரும் சிறப்போடும் வளர்த்து அவர்களுக்கு ஏற்றமுறையில் சிறந்த கல்வியறிவினைப் புகட்டினார்.

அவர்கள் ஆர்வமுடன் கல்வியறிவினைப் பெற்றுத் தங்களுக்கென தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொண்டார்கள். இவ்வாறு மனைவி, பிள்ளைகளுடன் கூடிக் குலாவி வாழ்ந்து வந்தார்.

தம் குலதெய்வமாகிய பாணாகவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளினை தனது கண் கண்ட தெய்வமாக கருதி தன்னாலான சரீரத் தொண்டுகளைச் செய்து வந்தார்.

இவ்வாறு குடும்ப ஒளி விளக்கான இவர் பழகுபவர்களுக்கு இனிமையானவராகவும், எல்லோருக்கும் உதவும் மனம் உடையவராகவும் குடும்பத்துடனும், அயலவர், சுற்றத்தாருடனும் விகடப்பேச்சுப்பேசி வாழ்ந்த இவரை கண்மூடி விழிப்பதற்குள் காலன் அழைத்தமையால் (09-08-2013) அன்று வெள்ளிக்கிழமை அனைவரையும் ஆறாத் துயரில் ஆழ்த்தி பூவுலக வாழ்வை நீத்து இறைவனடி சேர்ந்து பேரின்பப் பெருவாழ்வு பெற்றார்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத் திவ்வுலகு'

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி துணை

ஓம் சக்தி

# கௌரிக் காப்பு

## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற்கா.

## வேண்டுதல் கூற்று

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னை தோற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெலாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்துவந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்வளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல் லோபதிவரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனை பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனை பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாக் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையை தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பளுரும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே தற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்வென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பத்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தலைவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத்திரங்கள்
நானுனக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குத் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்து வரும்
சந்தனச் சார்ந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலை போற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவியணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியு முண்டு முக்கால உணர்வுண்டு
எச்சகக்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனை காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

**கௌரிகாப்பு முற்றும்.**



## காயத்திரி மந்திரம்

ஓம் பூர் புவஹு ஸ்வஹு
தத் ஸ்விதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமகி
த்யோ யோநஹு பரசோதயாத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கந்த சஷ்டி கவசம்

காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங்கை கூடும் நிமல ரருள்கந்தர்
சஷ்டி கவசந் தனை

குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

*நூல்*

நிலைமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக! வருக! மயிலோன் வருக!
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகு உடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வாலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா க்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுஉடல் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பு பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்.
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சயலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா! குகனே! கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா! கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா!
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா!
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக!
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேச முடன்யான் நெற்றியில் அணிய
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென்று அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடன்ஒரு நினைவது வாகி
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்!
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணிந்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சிப் புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்திய வாக்குகள்

✦. வலியையும் துன்பத்தையும் உணர்ந்தவர்களால் மட்டுமே துன்பம் அனுபவிப்பவர்களிடம் இரக்கம் கொள்ள முடியும்.

✦. ஒழுக்கமே வாழ்க்கையில் உயர்வுதரும் குணம். மக்கள் அனைவரும் ஒழுக்கமாக வாழக் கற்றுக் கொண்டால் உலகமே அமைதியின் வடிவமாக மாறிவிடும்.

✦. பிறருக்கு உதவும் பெரியோர்கள் தமக்கென்று எதையும் வைத்துக்கொள்வதில்லை. இவர்களின் எண்ணம், சொல், செயல் எல்லாமே சிறப்பானதாகவே இருக்கும்

✦. விளக்கு உயரத்தில் இருந்தால், ஒளி அதிக தூரத்திற்குப் பரவி வெளிச்சம் தெரியும் அதைப்போலவே உங்களது புகழ் பரவ வேண்டுமானால் எண்ணம் செயல்களால் உயர்ந்தவராக இருங்கள்

✦. எந்த ஒரு செயலைச் செய்தாலும் மற்றவர்களுடைய நலனைக் கருத்தில் கொள்ளுங்கள் சுயநலமான வாழ்க்கை வாழாதீர்கள்

✦. மனம் அலைபாயும் போது திரும்பத் திரும்ப மனதிற்குள் "நான் குரங்கல்ல மனிதன்" என்று சொல்லிக் கொள்ளுங்கள்.

✦. பணிவு இல்லாத இடத்திரல் இருக்கும் கணக்கற்ற செல்வத்திற்கு ஒரு மதிப்பும் கிடையாது.

✦. ஒருவருக்கு இன்பம் தரும் பொருள் மற்றொருவருக்கு துன்பத்தைத் தருகிறது.. ஆகவே இன்பம் என்பது ஒவ்வொருவரின் மனதில்தான் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிகள்...

✦. எல்லா மனிதர்களையும் நம்பிவிடுவது ஆபத்து. ஒருவரையும் நம்பாமல் இருப்பது பேராபத்து.

✦. கவிந்துவிடும் முகஸ்துதிகளையும் முழப்பொய்களையும்விட காயப்படுத்தினாலும் உண்மையே மேல்.

✦. "நீ தைரியமான மனிதன். உன்னால் சாதிக்கமுடியும்" இதற்குமேல் ஒருவரை வாழ்த்த வேறு வாசகம் தேவையில்லை.

✦. முட்டாளைச் சமாளிக்க ஒரே வழி மௌனமாக இருப்பதுதான்.

✦. ஒருவன் அரசனாக வாழலாம். ஆனால் அவன் மனிதனாகத்தான் இறக்கவேண்டும்.

✦. நீ இறக்கும்போது உனக்காக அழக் கூடியவர்களை நீ உயிருள்ள போதே தேடி வைத்துக் கொள்.

✦. நம் எதிர்காலத்தை நாமே உருவாக்குகின்றோம். அதை விதி என்கின்றோம்.

✦. உலகை அறிந்தவன் வெட்கப்படமாட்டான். தன்னை அறிந்தவன் அகம்பாவம் அடையமாட்டான்.

✦. படுக்கைக்குச் செல்வதற்கு முன்பாக கவலைகள் அனைத்தையும் செருப்போடு களற்றி வைத்துவிட வேண்டும்.

✦. நாலு நாள் பழகியிருந்தாலும் நல்லவன் நல்லதையே செய்வான். நாற்பது வருடம் பழகியிருந்தாலும் கெட்டவன் கெட்டதையே செய்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவுகள் மேம்பட....

**குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெருகாமலும் இருக்க :-**

✦. நானே பெரியவன். நானே சிறந்தவன் என்ற அகந்தையை **(Ego)** விடுங்கள்.

✦. அர்த்தமில்லாமலும், பின்விளைவு அறியாமலும் பேசிக்கொண்டே இருப்பதை விடுங்கள். **(Loose Talks)**

✦. எந்த விஷயத்தையும் பிரச்சனையை நாசூக்காகக் கையாளுங்கள் **(Diplomacy),** விட்டுக் கொடுங்கள். **(Compromise)**

✦. சில நேரங்களில் சில சங்கடங்களைச் சந்தித்துத்தான் ஆகவேண்டும் என்று உணருங்கள். **(Tolerance)**

✦. நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று வாதாடாதீர்கள் **(Adamant Argument Mindedness)**

✦. உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் விடுங்கள். **(Carrying Tales)**

✦. அளவுக்கு அதிகமாய் தேவைக்கு அதிகமாய் ஆசைப்படாதீர்கள். **(Over Expectation)**

✦. எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.

✦. கேள்விப்படுகின்ற எல்லா விடயங்களையும் நம்பி விடாதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✦. அற்ப விடயங்களைப் பெரிதுபடுத்தி விடாதீர்கள்.

✦. உங்கள் கருத்துகளில் உடும்புப் பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள். **(Flexibility)**

✦. மற்றவர் கருத்துக்களை, செயல்களை, நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். **(Misunderstanding)**

✦. மற்றவர்களுக்கு மரியாதை காட்டவும், இனிய இதமான சொற்களை பயன்படுத்தவும் தவறாதீர்கள். **(Courtesy)**

✦. புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும் கூட நேரமில்லாததுபோல் நடந்து கொள்ளாதீர்கள்.

✦. பேச்சிலும், நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து அடக்கத்தையும், பண்பையும் காட்டுங்கள்.

✦. அவ்வப்போது நேரில் சந்தித்து அவ்வப்போது பேசுங்கள்.

✦. பிரச்சனைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வரவேண்டும் என்று காத்திராமல், நீங்களே பேச்சை தொடங்க முன் வாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை.

வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம்; அதை நழுவவிடாதீர்கள்
வாழ்க்கை ஒரு பயணம்; அதை சென்று முடியுங்கள்.
வாழ்க்கை ஒரு விடுகதை; அதை சென்று விடுவியுங்கள்.
வாழ்க்கை ஒரு விளையாட்டு; அதில் ஈடுபடுங்கள்.
வாழ்க்கை ஒரு போராட்டம்; அதை வென்று காட்டுங்கள்.
வாழ்க்கை ஒரு வெகுமதி; அதை ஏற்றுக்கொள்ளுங்கள்.
வாழ்க்கை ஒரு போட்டி; அதில் வெற்றி பெறுங்கள்.
வாழ்க்கை ஒரு கலை; அதை அழகு படுத்துங்கள்.
வாழ்க்கை ஒரு வேதனை; அதை தாங்கிக் கொள்ளுங்கள்.
வாழ்க்கை ஒரு சவால்; அதை எதிர் கொள்ளுங்கள்.
வாழ்க்கை ஒரு சோகம்; அதற்கு மனம் தளராதீர்கள் .
வாழ்க்கை ஒரு பிரச்சினை; அதற்கு, தீர்வு, காணுங்கள்
வாழ்க்கை ஒரு கடல்; அதை நீந்தி, செல்லுங்கள்
வாழ்க்கை ஒரு தோட்டம்; அதை, அழகுபடுத்துங்கள்

## வாழ்க்கைமுக்கியமானவை மூன்று.


;

மதிக்க வேண்டியவை மூன்று; முதுமையானோர், மார்க்கம், சட்டம்
நேசிக்கவேண்டியவை மூன்று; தூய்மை, கடின உழைப்பு
போற்றவேண்டியவை மூன்று; அறிவு, அழகு, பண்பு
பேணிவளர்க்கவேண்டியவை மூன்று; திருப்தி, தைரியம், மனமகிழ்ச்சி
தவிர்க்க வேண்டியவை மூன்று; புகைத்தல். மதுஅருந்துதல். சூதாட்டம்
அடக்க வேண்டியவை மூன்று; நா, சோதனை, கோபம்
கட்டாயம் கவனிக்க வேண்டியவை மூன்று; பேச்சு. நடைமுறை, செயல்கள்
ஆதரிக்க வேண்டியவை. மூன்று; வாக்குறுதி, நட்பு, அன்பு
ஒழிக்க வேண்டியவை மூன்று; திருட்டு, சோம்பல், பொய்
விரும்ப வேண்டியவை மூன்று; கருணை, நற்குணம், மன அமைதி
வெறுக்க வேண்டியவை மூன்று; பெருமை, அநீதி, வாக்கு மீறல்
அஞ்ச வேண்டியவை மூன்று; களவு. கோள், பொய்
எதிர்கொள்ள வேண்டியவை மூன்று; கவலை, பயம். மரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வம்சாவழி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்





"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் – உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு" (திருவள்ளுவர் வாக்கு)

எங்கள் குடும்ப விளக்கு அமரர் கார்த்திகேசு ஜெகநாதன் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு எம்மை நாடி வந்து உதவி செய்த அனைவருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபச் செய்தி தெரிவித்தோருக்கும், இறுதிக்கிரியைகள், அந்தியேட்டிக்கிரியைகள் ஆகியவற்றில் கலந்து கொண்டோருக்கும், தேவையான போது உதவி ஒத்தாசை புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இம்மலரைச் சிறப்புற அச்சிட்டுத் தந்த நல்லூர் திருவள்ளுவர் அச்சகத்தினருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

மாதகல் கிழக்கு,
மாதகல்.

திருவள்ளுவர் அச்சகம், 593, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

"எது நடந்ததோ. அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ. அதுவும் நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ. அதுவும்
நன்றாகவே நடக்கும்.உன்னுடையது எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய்?எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.எதை நீ படைத்திருக்கிறாய்?
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக்கொண்டாயோ.
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ.
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ.
அது நாளை மற்றொருவனுடையதாகிறது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்"

இந்த மாற்றம் உலக நியதியும், எனது படைப்பின் சாராம்சமுமாகும் .

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

திருவள்ளுவர் அச்சகம், நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org